பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**16 03 2026** **MONDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழகத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ளதையடுத்து, தேர்தல் பணியாளர்கள் அதனை செயல்படுத்த தொடங்கியுள்ளனர்.

   தகுந்த ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் ரொக்கம் பறிமுதல் செய்யப்படும் என்றும், போதிய ஆவணங்களை சமர்ப்பித்த பின்னர் திருப்பி வழங்கப்படும் என்றும் மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

2. கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

3. துபாய் சர்வதேச விமான நிலையம் அருகே இன்று ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து விமான சேவைகள் பாதிக்கப்பட்டன.

4. ஆஸ்கார் திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

...இனி விரிவான செய்திகள்...

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ளதையடுத்து, தேர்தல் பணியாளர்கள் அதனை செயல்படுத்த தொடங்கியுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கணக்கில் வராத பணம் அல்லது தகுந்த ஆவணம் இல்லாத பணம் கொண்டு செல்லப்பட்டால் அதனை அதிகாரிகள் பறிமுதல் செய்து வருவதாக தெரிவித்தார்.

தகுந்த ஆவணங்களை அளித்த பின்னர் அந்த பணம் அவர்களுக்கு திருப்பி அளிக்கப்படும் என்று திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்தார்.

*(Sound Byte — அர்ச்சனா பட்நாயக் - 60 Sec. )*

தமிழகத்தில் ஐந்து கோடியே 69 லட்சம் வாக்காளர்கள் உள்ளதாக அவர் கூறினார்.

மார்ச் 30-ஆம் தேதிமுதல் ஏப்ரல் 6-ஆம் தேதிவரை பொது விடுமுறை நாட்கள் தவிர அனைத்து நாட்களிலும் காலை 11 மணிமுதல், பிற்பகல் 3 மணிவரை வேட்புமனு தாக்கல் செய்யலாம் என்று அவர் தெரிவித்தார்.

வாக்காளர்கள் தங்களது பெயர்களை தேர்தல் ஆணையத்தின் இணையதளம் அல்லது அந்தந்த வாக்குச்சாவடிகளில் விவரங்களை சரிபார்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்கு செல்லும்போது தங்களது செல்போன்களை பாதுகாப்பாக வைப்பதற்கு சிறப்பு பெட்டகம் அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் 100 சதவீதம் வாக்குச்சாவடிகளை இணையதளம் மூலம் நேரடியாக கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை திருமதி அர்ச்சனா பட்நாயக் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் பாதுகாப்புப்பணிகளுக்கு எல்லை பாதுகாப்புப்படையினரும், துணை ராணுவப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தலையொட்டி, தலைமை செயலகத்திலும், மாநில அரசு அலுவலகங்களிலும் அரசியல் தலைவர்களின் புகைப்படங்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளில் அரசு அறிவிப்புகள் தொடர்பான விளம்பரங்களும் அகற்றப்பட்டுள்ளன.

சுவர்களில் உள்ள அரசியல் தொடர்பான சுவரொட்டிகள் மீது புதிய வண்ணம் பூசப்பட்டு வருகின்றன.

அனைத்து வாகனங்களையும் தேர்தல் அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

சந்தேகம் இருப்பின் வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

ஈரோடு மாவட்டத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரி திரு கந்தசாமி தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — கலெக்டர் கந்தசாமி - 37 Sec. )***

தேர்தலையொட்டி, அரசியல் கட்சிகள் கூட்டணி குறித்த பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றன.

தொகுதி ஒதுக்கப்பட்ட கட்சிகள் வேட்பாளர்கள் தேர்வு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

<<<<<<<>>>>>>

கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

வரும் **23**-ஆம் தேதிவரை வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம்

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை **24**-ஆம் தேதி மேற்கொள்ளப்படும் என்றும், மனுக்களை திரும்பப்பெற **26**-ஆம் தேதி கடைசி நாளாகும்.

அடுத்த மாதம் **9**-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

<<<<<<<>>>>>>

ஒடிஷா மாநிலம் கட்டாக் மருத்துவமனையில் இன்று அதிகாலை நேரிட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 25 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு **Mohan Charan Majhi** கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

பீகார், ஒடிசா, ஹரியானா மாநிலங்களைச் சேர்ந்த 11 மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது.

தமிழகம் உள்ளிட்ட 7 மாநிலங்களைச் சேர்ந்த 26 மாநிலங்களவை உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

தமிழகத்திலிருந்து திருச்சி சிவா, திரு. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், திரு. **Christopher Manickam**, திரு. எல்.கே. சுதீஷ், திரு. தம்பித்துரை, டாக்டர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் ஏற்கனவே போட்டியின்றி தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

பீகாரில் ஐந்து மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளுக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெற்று வருகிறது.

நான்கு இடங்களில் தேசிய ஜனநாயக கூட்டணி உறுப்பினர்கள் வெற்றி பெறுவது உறுதியாகியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஒடிசாவில் நான்கு மாநிலங்களவை பதவியிடங்களுக்காக ஐந்து பேர் போட்டியிடுகின்றனர். ஹரியானாவில் இரண்டு மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது.

<<<<<<<>>>>>>

மாநிலங்களவை உறுப்பினரும், முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியுமான திரு ரஞ்சன் கோகோய்க்கு, மாநிலங்களவையில் இன்று பிரியாவிடை கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநிலங்களவை தலைவரும், குடியரசு துணைத்தலைவருமான திரு சி பி ராதாகிருஷ்ணன், கடந்த **2020** மார்ச் மாதத்தில் இருந்து திரு கோகோய் மாநிலங்களவை உறுப்பினராக சிறப்பாக செயல்பட்டு வந்ததாக கூறினார்.

<<<<<<<>>>>>>

துபாய் சர்வதேச விமான நிலையம் அருகே இன்று நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் எரிபொருள் சேமிப்பு நிலையம் தீப்பற்றியது.

இதனையடுத்து, அந்த விமான நிலையத்தில் இருந்து பயணியர் விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

தீயை கட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாக துபாய் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் யாரும் காயமடையவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

துபாய்க்கு செல்லும் விமானங்கள் **Al Maktoum** சர்வதேச விமான நிலையம் உள்ளிட்ட அண்டை நகர விமான நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, துபாய் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஏர் இந்தியா விமான சேவை இன்று ரத்து செய்யப்பட்டது.

இருப்பினும், அபுதாபி, ராஸ் அல் கைமா, ஷார்ஜா நகரங்களுக்கான விமான சேவை தொடர்ந்து இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

துபாய் விமான நிலையம் அருகே ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டால் சென்னையிலிருந்து, துபாய்க்கு சென்ற எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் மீண்டும் சென்னை விமான நிலையம் வந்தடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte —செங்கல்பட்டு சுரேகா - 37 Sec. )***

<<<<<<<>>>>>>

**ஆஸ்கார் திரைப்பட விருதுகள் இன்று அறிவிக்கப்பட்டது.**

**அமெரிக்காவின் Los Angeles நகரில் நடைபெற்ற விழாவில் One Battle After Another திரைப்படத்துக்கு சிறந்த திரைப்படம் உள்பட ஆறு விருதுகள் வழங்கப்பட்டன.**

**இந்த திரைப்படத்தை இயக்கிய Paul Thomas Anderson-க்கு சிறந்த திரைப்பட இயக்குனர் விருது வழங்கப்பட்டது.**

**Sinners திரைப்படத்தில் நடித்த Michael Jordan-க்கு சிறந்த நடிகருக்கான விருதும், Hamnet திரைப்படத்தில் நடித்த Jessie Buckley-க்கு சிறந்த நடிகைக்கான விருதும் வழங்கப்பட்டன.**

**சிறந்த ஒலிப்பதிவு மற்றும் சிறந்த இசையமைப்புக்கான விருது Sinners திரைப்படத்துக்கும், சிறந்த படத்தொகுப்புக்கான விருது One Battle After Another திரைப்படத்துக்கும் அளிக்கப்பட்டது.**

**<<<<<<<END>>>>>>**